# தேவனை இயற்கை எவ்விதம் சித்தரிக்கின்றது?

*"அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள் மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றி" (ரோமர் 1:23) வைத்துக் கொண்டுள்ள மனிதர்களின் ஆவிக்குரிய வெளிப் பார்வை எவ்வளவு பரிதாபகரமாய் இருக்கின்றது! சிருஷ்டிகரைத் தொழுது கொள்வதற்கு மாறாக சிருஷ்டியைத் தொழுது சேவிக்கின்றவர்கள் எவ்வளவு கவலைக்குரிய நிலையில் இருக்கின்றனர்!*

*பெலிஸ்தர்கள், மூலவியாதியின் சாயலான ஐந்து பொன் சுரூபங்களையும் சுண்டெலிகளின் சாயலான ஐந்து பொன் சுரூபங்களையும் கொடுத்து தேவனைச் சமாதானம் பண்ண முயன்றதை வாசிக்கும் ஒருவருடைய இருதயமானது துக்கப்படுகின்றது (1 சாமு. 6:2-5ஐக் காணவும்).*

*தெய்வீகத்துவமானவர் சீரியர்களின் சிந்தையில் மிக அதிகமாக எல்லைக்குட்படுத்தப்பட்டு, பிறழ்வு படுத்தப்பட்டார். அவர்கள், மலைகளைக் கட்டுப்படுத்த ஒரு கடவுளும் பள்ளத்தாக்குகளைக் கட்டுப்படுத்த ஒரு கடவுளும் இருப்பதாக நினைத்தனர்.*

## விவேக விளக்கத்தால் தேவனை அறிதல்

*தவறான தகவல் அறிவிக்கப்படாத பொழுது, மனிதனின் விவேக விளக்கத்தால் மட்டுமே கூட உண்மையான தேவனுடைய இருப்பைப் பற்றி மக்கள் அறிய முடிகின்றது. வேதாகமம் இன்றியே கூட, அவர்கள் அவரைப் பற்றிய பல விஷயங்களை அறிய முடிகின்றது.*

### *அவர் சிருஷ்டிகராய் இருக்கின்றார்*

*இந்திய ஜனாதிபதியின் இருப்பிடமான ராஜ்பவனுக்குள் ஒருவர் நடந்து செல்லுகையில், அந்தப் பெரிய குடியிருப்பை யாரோ சிலர் கட்டினார்கள் என்று அவரிடத்தில் கூறப்படத் தேவையில்லை. பகுத்தறிவுள்ள எந்த மனிதரும் வேறு வகையில் சிந்திக்க முடியாத அளவுக்கு சுத்த விவேக விளக்கமான அறிவானது இப்படிப்பட்ட விஷயங்களில் மிகத் தெளிவாக உள்ளது. உண்டாக்கப்பட்ட பொருளானது உண்டாக்குபவர் ஒருவரைக் கொண்டிருக்க வேண்டும் என்பது ஜாய்ஸ் கில்மெர் என்ற கவிஞரால் பின்வரும் கவிதையில் அதிக மதிநுட்பத்துடன் அழகுடன் விளக்கப்படுவதுபோல வேறு எவராலும் ஒருக்காலும் விளக்கப்*

பட்டதில்லை:

மரத்தைப் போல அழகிய கவிதை ஒன்றை
மற்றொரு முறை நான் பார்ப்பேன் என்று நினைக்கவில்லை;
முற்றிய கோடை காலத்தில் ஒரு மரம் அவளின் தலைமுடியில்
சிறு பறவைகளின் கூட்டை அணிந்து காணலாம்.

மடிதனில் பனிபடர்ந்த ஒரு மரமானது
மழையுடன் நெருங்கி உறவாடி வாழ்கிறது
பசி நிறைந்த மரத்தின் வாயானது பூமியின்
இனிப்போடும் மார்பில் அழுந்துகின்றது.

நாள் முழுவதும் தேவனையே நோக்கிப் பார்த்து
இலை நிறைந்த தன் கரங்களை உயர்த்தி ஜெபிக்கிறது மரம்,
என்னைப் போன்ற முட்டாள்களினால் இயற்றப்படுவதோ
  கவிதைகள்தான்
தேவன் ஒருவர் மாத்திரமே மரத்தைப் படைக்க வல்லவர்.[1]

## அவர் மிக மேலான மனிதராவார்

மற்றவர்கள் அளித்த பொருட்களைப் பயன்படுத்தியே மனிதர்கள் வானளாவிய கட்டிடங்களையும், ஒலியை விட வேகமாய் ஓடும் விண்வெளி ஓடங்களையும் செய்ய முடிந்துள்ளது. இருப்பினும் மனிதர்கள், இந்த உலகத்தைக் கட்டி யெழுப்பும் பணியில் அரும் சாதனை புரியவில்லை. நாம் அறிந்துள்ளபடி இந்த அண்டத்தை வடிவமைக்க முடிந்தவர் மனிதருக்கு மேலானவராகவே இருக்க வேண்டும். படைக்கும் தேவனானவர் மனிதர்களை விட எல்லையற்ற வகையில் மேலானவராய் இருக்கின்றார்.

## அவர் மாபெரும் வல்லமை கொண்டுள்ளார்

காணப்படாத கரத்தின் வல்லமையினால் கனமான கோள்கள் (நமது பூமி என்ற கோளானது 6,592,000,000,000,000,000,000 டன்கள் எடையுள்ள தாகும்) தங்களது சுற்றுப் பாதையில் பற்றி வைக்கப்பட்டிருப்பதை ஒருவர் படிக்கும்பொழுது, அவருக்கு வேதாகமமானது, தேவன் சர்வ வல்லவர் என்று எடுத்துரைக்கத் தேவையில்லை. தேவனைப் போன்று அவ்வளவு வல்லமையைத் தெளிவாய்த் தம்மிடம் கொண்டுள்ள ஒருவரைப் பற்றி கருத்துக் கொள்வதென்பது மிகவும் கடினமானதாகும்.

## அவர் ஒழுங்கமைவு செய்பவராய் இருக்கின்றார்

இரவும் பகலும், கோடையும் குளிரும் மீண்டும் மீண்டும் தோன்றுவதையும், முன்னுரைக்கக் கூடிய துல்லியமான கிரகணங்களையும் கவனிக்கின்ற ஒருவர், "நான் தேவனைக் கண்டிராவிட்டாலும், அவர் நோக்க மற்றவரல்ல என்பதை அறிவேன்; அவர் ஒழுங்கமைவு மற்றும் சட்டம்

ஆகியவற்றின் தேவன் என்று அறிவேன்" என்று கூறுவது அவசியமாகின்றது.

## அவர் ஒருவராய் இருக்கின்றார்

ஒழுங்கமைவான ஒரு வீட்டினூடே ஒருவர் நடந்து செல்லுகையில், அந்த வீட்டின் காணப்படாத காப்பாளரைப் பற்றிய சில விஷயங்களை அவர் அறிவது மட்டுமின்றி, ஒருவர் மற்றவருக்கெதிராகச் செயல்படும் இரு காப்பாளர்கள் அவ்வீட்டிற்குள் இருப்பதில்லை என்றும் அவர் அறிகின்றார். வீட்டுக் காப்பாளர் ஒருவர் எத்தனை உதவியாளர்களைக் கொண்டுள்ளார் என்பதை அவர் அறியாதிருக்கலாம், ஆனால் வீடு முழுவதிற்கும் ஒரே சிந்தை மற்றும் ஒரே இயக்கம் இருப்பதற்கான ஆதாரத்தை அவர் காண்கின்றார். அது போலவே இயற்கையில், சட்டங்கள் மற்றும் ஒழுங்கமைவுகள் ஆகியவற்றின் இசைவு என்பது, தேவன் ஒருவரே மற்றும் அவர் ஒரே சிந்தையுள்ளவரே என்ற விவேக விளக்கலை உறுதிப் படுத்துகின்றது.

## தேவன் நல்லவராக இருக்கின்றார்

மனிதருடைய நிலைப்பாட்டிலிருந்து பார்க்கும்பொழுது, இயற்கையில் உள்ள பாதகமான சில விஷயங்கள் - சூறாவளிகள், வியாதி, மற்றும் மரணம் போன்றவை - விளக்கப்பட முடியாதவைகளாக உள்ளன. இருப்பினும், மகிழ்வற்ற விஷயங்களின் எண்ணிக்கையை விட அதிகமான அளவிற்கு, யாரோ ஒருவர் மனிதரின் நலத்தைச் சிந்தித்துக் கொண்டிருக்கிறார் என்பதற்கு எண்ணற்ற சாட்சிகள் உள்ளன. விதைப்பதற்கு விதையையும், புசிப்பதற்கு ஆகாரத்தையும், வானத்திலிருந்து மழையையும், உணவினா லும் மகிழ்ச்சியினாலும் இருதயங்களை நிரப்புவதற்குச் செழிப்புள்ள காலங்களையும் அளிப்பதற்கு யாரோ ஒருவர் போதிய அளவுக்கு நல்லவராக, போதிய அளவுக்கு இரக்கமுள்ளவராக இருக்க வேண்டும். இப்படிப்பட்ட இரக்கம் நிறைந்த அளிப்புகள் பொல்லாத தேவனிடமிருந்து வரமுடியாதாகையால், - தீமையின் பிரச்சனைக்குப் பதில் அளிக்கப்படாத நிலையைப் பற்றியிருப்பினும் - ஒருவர், தேவன் நல்லவர் என்று கூறும் படியாகவே வலியுறுத்தப்படுகின்றார்.

## அவர் அழகை விரும்புகின்றார்

நன்மைக்கான சாட்சியங்கள் போலவே, தேவன் அழகை விரும்பு வதற்கான சாட்சியங்கள் இயற்கையில் நிறைந்துள்ளன. அழகின்மைக்கான சில ஆதாரங்கள் இயற்கையில் இருப்பினும் - அவைகளில் சிலவற்றிற்கு காரணம் கூறி விளக்க இயலாது - "தேவன் அழகிய பொருட்களை விரும்பு கின்றார்!" என்று வியப்பதை ஒருவர் தடை செய்யாத அளவுக்கு இயற்கை யின் அழகானது மிக ஏராளமானதாக உள்ளது. ஒரு ரோஜா மலரானது வண்ணமும், நறுமணமும் இன்றி, சதுரமான வடிவத்தில் உண்டாக்கப் பட்டிருக்கலாமே. குயிலானது குரலற்றதாக உண்டாக்கப்பட்டிருக்கலாமே; கண்கள் சிமிட்டுதலின்றியும், உதடுகள் புன்சிரிப்புகளின்றியும் உண்டாக்கப்

பட்டிருக்கலாமே. மீண்டும், சில வினாக்கள் விடையளிக்கப்பட முடியாதவைகளாய் இருந்தாலும், தேவன் அழகினை மிகவும் விரும்பு கின்றார் என்று ஒருவர் கூறுவதற்கு ஏராளமான சாட்சியங்கள் அவரை வற்புறுத்துகின்றன.

### அவர் ஒழுக்கமுள்ளவராக இருக்கின்றார்

மனிதருடைய உடலானது அதை உண்டாக்கியவர் ஒருவரைக் கொண்டிருக்க வேண்டியது போலவே, மனிதருடைய மனச்சாட்சியும் அதை உண்டாக்கியவர் ஒருவரைக் கொண்டிருக்க வேண்டும். உயிரற்ற பொருள் ஒன்று சரி மற்றும் தவறு என்ற கருத்துணர்வை உண்டாக்கக்கூடும் என்பது நம்பக் கூடியதல்ல; அது போலவே, மனச்சாட்சியை உண்டாக்கிய தேவன் சரி மற்றும் தவறு என்ற கருத்துணர்வுடையவராக இருக்க மாட்டார் என்பதும் நம்பக் கூடியதல்ல. மறுபடியுமாக, நிரூபணமானது தெளிவாகவே இருக்கிறது: அழியக்கூடிய மனிதரால் தேவன் காணப்படாதவராய் இருப்பினும், மனிதர் தம்மை உண்டாக்கியவர் ஒரு ஒழுக்கமுள்ளவராக இருக்கின்றார் என்பதை அறிகின்றார்.

## வெளிப்படுத்துதலினால் தேவனை அறிதல்

இயற்கையின் வெளிச்சத்தினால் தேவனைப்பற்றிய பல சத்தியங்கள் தனிப்பட்ட வகையில் அறியப்படுத்தப்பட்டிருக்க, தேவனுக்கு ஊழியம் செய்வது எப்படி என்பது ஒரு மலைப் பகுதியில் எழுதப்பட்டிருக்கவு மில்லை அல்லது ஆகாயத்தில் பளிச்சிடவும் இல்லை. பிரத்தியேகமான வெளிப்படுத்துதல் எதுவுமின்றியே மனிதரின் தோற்றம் பற்றி ஒருவர் சிலவற்றை அறிந்து கொள்ள முடியும், ஆனால் அவர் மனிதரின் கடமை யையோ அல்லது மனிதரின் அடைவிடத்தையோ அவ்விதமாய் அறிந்து கொள்ள முடியாது. மனிதரின் மதரீதியான வழி மனிதருக்குள்ளாகவே இருப்பதில்லை.

இயற்கையானது மனிதரின் தேவைகளை முன்னாக தெளிவாகக் கண்டது, மற்றும் அவர்களின் திருப்திக்குத் தேவையான அளிப்புகள் ஏற்படுத்தப்பட்டன. நுரையீரல்களுக்குக் காற்றும், வயிறுகளுக்கு உணவும், மற்றும் தனிமைக்கு மனைவியரும் அளிக்கப்பட்டனர். இவ்வளவு இரக்கமுள்ள இயற்கையானது மனிதரின் மதரீதியான தேவைகளை நிறைவேற்றாமல் விட்டுவிடாது. சொல்லப்போனால் மனிதரின் மாபெரும் தேவைகளுக்கான திருப்தியானது கிடைக்காதிருந்தால் ஆச்சரியப்படு மளவுக்கு இயற்கையானது மனித இனத்திற்கு அதிகமான செயல்களைச் செய்துள்ளது.

எவரொவரும் எதிர்பார்க்கின்றபடியே, தேவன் தம்மை ஒரு பிரத்தியே கமான வழிமுறையில் மனிதருக்கு வெளிப்படுத்தியுள்ளார் என்பதை நம்பக் கூடிய வரலாறு உறுதிப்படுத்துகின்றது. இது முதலாவதாக வாய்மொழி வழியாகவும், பிறகு கனவுகள் மற்றும் தரிசனங்கள் மூலமாகவும், பின்பு கற்பலகையில் எழுதப்பட்ட கட்டளைகள் மூலமாகவும், பின்பு புத்தகங்

களில் எழுதப்பட்ட கட்டளைகள் மூலமாகவும் ஏற்பட்டது. மனிதர் தாமாகவே அறிந்து கொண்டிருக்க முடியாதவைகளைத் தேவன் மனிதருக்குப் படிப்படியாக அறியச் செய்தார். கடைசியாக, தேவனுடைய முன் கண்ணோட்டம், நற்தன்மை, வல்லமை மற்றும் அன்பு ஆகியவை அவர் தம்மையே ஒரு மனிதப் பிறவியாக ஏற்படுத்திக் கொண்டதில் காட்சிப் படுத்தப்பட்டன. அவர் இம்மானுவேல் "தேவன் நம்மோடிருக்கிறார்" என்று ஆவதற்குச் சித்தமானார். மற்றும் அவர் தம்மையே ஒரு *Go'el*, ஒரு மீட்பர் ஆவதற்கு, நமது குறைவுகளுக்கு ஒரு நிறைவளிக்க நம் எல்லாருக்காகவும் அவர் மரிக்கச் சித்தமானார். அவர் உயிர்த்தெழுதலும் ஜீவனுமானார் - பரிபூரண ஜீவன் ஆனார் - என்று வாசிக்கையில் நாம் எவ்வளவு அகம் மகிழ்கின்றோம்!

## முடிவுரை

மனிதரின் தோற்றம், கடமை, மற்றும் மகிமையின் நம்பிக்கை ஆகியவற்றை வெளிப்படுத்தியுள்ளவரை நோக்கி சாதாரண மனித இருதயங்கள் இழுக்கப்படுகின்றன. சிலுவைக் காட்சியினால் அவர்கள் பற்றிப் பிடிக்கப்பட்டு, உயிர்த்தெழுதலின் மகத்துவத்தால் உயர்த்தப் படுகின்றனர். இயற்கையில் உள்ள நல்ல மற்றும் அழகு நிறைந்த கொடைகள் யாவும் மேன்மையான *agape* அன்பின் மாபெரும் வடிவத்தால் உடுத்துவிக்கப்படுகின்றன. இது நித்திய ஜீவனாக உள்ளது: உண்மையான ஒரே தேவனையும் அவர் அனுப்பியுள்ள இயேசு கிறிஸ்துவையும் அறிதல். இவரே நாம் ஆராதிக்கின்ற தேவனாக இருக்கின்றார்.

---

குறிப்பு

[1]Joyce Kilmer, *TREES & Other Poems* (Garden City, N. Y.: Doubleday & Co., 1914), 19.